புதுச்சேரி அரசு
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை

தேதி 03.02.2012

## செய்திக் குறிப்பு

'தானே'' புயலால் புதுச்சேரியைச் சேர்ந்த பொதுமக்கள் அடைந்த பாதிப்பினைத் தொடர்ந்து உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் அனைவருக்கும் புயல் நிவாரணமாக தலா ரூ.2000 வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதனைத் தொடர்ந்து புதுச்சேரி, குடிமைபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை மூலம் 2,59,010 தகுதியான உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு 02.01.2012 முதல் 20.01.2012 வரை புதுச்சேரி மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையின் அங்கண்வாடி மையங்கள் வாயிலாக நிவாரணம் வழங்கப்பட்டது.

மேற்கூறிய நாட்களில் நிவாரணத்தொகை பெறத்தவறியதாக பல்வேறு தரப்பினரிடமிருந்து வந்த கோரிக்கையை கருதி மேற்கூறிய விடுபட்ட தகுதிவாய்ந்த உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கு எதிர்வரும் **திங்கள் (06.02.2012) முதல் வெள்ளி (10.02.2012) வரை மட்டுமே,** புதுச்சேரி, சித்தன்குடியிலுள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை அலுவலகத்தில் வழங்கப்படும். மேற்கொண்டு நிவாரணத்தொகை வழங்குவதற்கான கால அளவு நீட்டிக்கப்படமாட்டாது.

SPECIAL SECRETARY-cum-DISTRICT COLLECTOR ★ PUDUCHERRY

(Dr. சு.பா. தீபக் குமார், இ.ஆ.ப.,)
மாவட்ட ஆட்சியர்